**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 407/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 09.06.2025**

| | |
|---|---|
| **Name : சீனிவாசன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024–ம் வருடம் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, கடந்த 05.01.2024ம் தேதி காலை சுமார் 10 மணிக்கு மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற காயத்தகவலின் பேரில் உதவி ஆய்வாளர் மாதுராஜ் உத்தரவின் பேரில் நான் மருத்துவமனை சென்று பழனி மனைவி ராசாத்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். பின்னர் விசாரணைக்கு பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக தெரிந்துகொண்டேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் எங்கிருக்கும் போது தகவல் வந்தது என்றால் காவல் நிலைய பணியிலிருக்கும் போது தகவல் வந்தது. எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் வாக்குமூலம் ஒப்படைத்தேன் என்றால் பகல் சுமார் 12 மணியிருக்கும். இந்த வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்று விசாரித்தார் என்றால் 31.01.2024ம் தேதி விசாரித்தார். மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.